# யூலை- 24 - திங்கள்

## புனிதர் சார்பெல் மக்குல்ப்

**யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார் மத். 12:40**

## முதல் வாசகம் :விடுதலைப் பயணம் 14 : 5 – 18

தங்களையே கடுமையாக நடத்துவோர் அடுத்தவருக்கு எங்ஙனம் நன்மை செய்வர்? அவர்கள் தங்களிடம் உள்ள செல்வங்களையே துய்த்து மகிழத் தெரியாதவர்கள்.தமக்குத்தாமே கருமியாய் இருப்போரைவிடக் கொடியவர் இலர் அவர்களது கஞ்சத்தனத்துக்கு இதுவே தண்டனை.அவர்கள் நன்மை செய்தாலும் அது அவர்களை அறியாமல் நிகழ்கின்றது இறுதியில் தங்கள் கஞ்சத்தனத்தையே காட்டி விடுவர்.பொறாமை கொண்டோர் தீயோர் பிறரைப் புறக்கணித்து முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொள்வர்.பேராசை கொண்டோர் உள்ளது கொண்டு நிறைவு அடைவதில்லை பேராசையுடன் கூடிய அநீதி, உள்ளம் தளர்வு அடையச் செய்கிறது.கருமிகள் மற்றவர்களுக்கு உணவை அளந்தே கொடுப்பார்கள். அவர்களின் உணவறையில் எதுவும் இராது.குழந்தாய், உள்ளத்தைக் கொண்டு உன்னையே பேணிக்கொள் ஆண்டவருக்கு ஏற்ற காணிக்கை செலுத்து.இறப்பு யாருக்கும் காலம் தாழ்த்தாது என்பதையும் நீ சாகவேண்டிய நேரம் உனக்கு இன்னும் சொல்லப்படவில்லை என்பதையும் நினைவில் கொள்.நீ இறக்குமுன் உன் நண்பர்களுக்கு உதவி செய் உன்னால் முடிந்தவரை தாராளமாகக் கொடு.ஒவ்வொரு நாளும் உனக்குக் கிடைக்கும் நன்மைகளை நன்கு பயன்படுத்து உன் வாழ்வின் இன்பங்களைத் துய்க்காமல் விட்டுவிடாதே.உன் உழைப்பின் பயனைப் பிறருக்கு விட்டுவிடுவதில்லையா? நீ உழைத்துச் சேர்த்ததைப் பங்கிட்டுக்கொள்ள விடுவதில்லையா? கொடுத்து வாங்கு மகிழ்ந்திரு. பாதாளத்தில் இன்பத்தைத் தேட முடியாது.ஆடைபோன்று மனிதர் அனைவரும் முதுமை அடைகின்றனர் ”நீ திண்ணமாய்ச் சாவாய்” என்பதே தொன்மை நெறிமுறை. இலை அடர்ந்த மரத்தின் சில இலைகள் உதிர்கின்றன் சில இலைகள் தளிர்க்கின்றன. ஊனும் உதிரமும் கொண்ட மனித இனத்திலும் சிலர் இறப்பர் சிலர் பிறப்பர்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்குப் புகழ் பாடுவேன். ஏனெனில் அவர் மாட்சியுடன் வெற்றி பெற்றார்.

## நற்செய்தி : மத்தேயு 12 : 38 – 42

அக்காலத்தில் மறைநூல் அறிஞர் சிலரும் பரிசேயர் சிலரும் இயேசுவுக்கு மறுமொழியாக, ”போதகரே, நீர் அடையாளம் ஒன்று காட்ட வேண்டும் என விரும்புகிறோம்” என்றனர்.அதற்கு அவர் கூறியது ”இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு இறைவாக்கினரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிட மகனும் மூன்று பகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்.தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால், இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத் தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக் கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா“ என்றார்.

**தியானம்:** தமது தகுதியை மறந்து இயேசுவிடத்திலே அடையாளம் கேட்டவர்களைப் பார்த்து,” இந்தத் தீயவிபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர் என்று இயேசு தெரிவிப்பதாக நற்செய்தி தெரிவிக்கின்றது. இயேசுவும் இவர்களுக்கு இறைவாக்கினரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது” என்கிறார். நற்செய்தியில் வரும் ”விபசாரத் தலைமுறையினர்” என்கிறவார்த்தையை வெறும் உடல் சார்ந்த விபசார பொருளாகநாம் புரிந்து கொள்ளாது, நம்பிக்கைத்துரோகம் என்கிற அர்த்தமாக பொருள் கொள்ளலாம் என்பது இறையியலாளர்கள் கருத்தாகும். பழைய ஏற்பாட்டில், இஸ்ரயேல் மக்களுக்கும், எல்லாம்வல்ல கடவுளுக்குமான உறவுதிருமண உறவாக வேதாகமத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. , கடவுளின் அடையாளமாகிய இயேசு அருகிருந்த போதிலும், வேறு அடையாளங்கள் கேட்பது நம்பிக்கைத் துரோகம் என்று இயேசு சொல்கிறார். கடவுள் நமக்கு தந்திருக்கிற கொடைகளையும், நம் வாழ்வில் செய்திருக்கிற வல்ல செயல்களையும் அனுபவித்துவிட்டு, அவரைப் புறக்கணித்து விட்டுச்சென்றால், நாமும் கடவுளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்கிறோம். கடவுளுக்கு, அவருடைய கட்டளைகளுக்கு பிரமாணிக்கமாய் இருப்போம்.